பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 21 றஜப் 22 இதழ் 52
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3-4-1986

## பண்டாரியின் இடத்தில் வெங்கடேஸ்வரன்

(புதுடில்லி)

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இப்பதவிக்கு திரு எஸ். வெங்கடேஸ்வரன் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1952ம் ஆண்டில் இந்திய வெளியுறவுச் சேவை அலுவலர்கள் அணியில் இணைந்துகொண்ட திரு. வெங்கடேஸ்வரன் பீகிங், டமாஸ்கஸ் ஆகிய தலைநகரங்களில் இந்தியாவின் ஸ்தானிகராகக் கடமையாற்றியுள்ளார்.

ஜெனிவாவிலுள்ள ஐ. நா. சபை நிலையத்தில் இந்தியப் பிரதிநிதியாகவும் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். (ஷ)

## மட்டுநகரில் பதற்றம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்துக்கருகில் கோட்டை முனைப்பாலத்தடியில் அடுத்

(5ம் பக்கம் பார்க்க)

● கொக்காவில் கண்ணிவெடியில் 'லெப்டினண்ட்'டுடன்

# 8 படையினர் பலி! ராணுவம் சுட்டு 6 பேர் பலி! 20 பேர் காயம்!

(கொழும்பு)

**கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து வவனியாநோக்கி வாகனங்களில் சென்ற இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் கண்ணிவெடி வைத்தும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் தாக்குதல்கள் நடாத்தியதில் 2வது லெப்டினன்ட் உட்பட 8 இராணுவத்தினர் பலியானதாகவும் 3 சிப்பாய்கள் படுகாயமடைந்ததாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.**

நேற்றுக்காலை 8 மணிக்கு கொக்காவிலிலிருந்து 3 மைல் தூரத்தில் இத்தாக்குதல்சம்பவம் இடம்பெற்றது.

அரச அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2வது லெப்டினண்ட் எம். ஏ. எம். ஜி மல்லவராச்சி, கோப்பரல்கள் பியதாஸ, செனரத்பண்டா, லான்ஸ் கோப்ரல்கள் கருணதிலக, விஜயசிங்க, சிப்பாயகள் சுனில், தயபால, வலக்கண்டே ஆகியோர் ஸ்தலத்தில் பலியானார்கள்; மேலும் 3 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

இவர்கள் சென்ற வாகனம் முற்றுகச்சேதமடைந்தது.

கண்ணிவெடிச் சம்பவத்துக்குப் பின்னர், ஆர் பி ஜி. ரகத் துப்பாக்கிகளால் தீவரவாதிகள் இராணுவத்தினரை நோக்கிச் சரமாரியாகச் சுட்டார்கள்.

இச்சம்பவத்தின்போது இராணுவத்தினர் திருப்பிச் சுட்டதில் 20பேர் காயமடைந்தனர்; 6 பேர் பலியானார்கள். பலியான 6 பேரில் மூவரின் சடலங்களை அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். ஆயுதங்கள் பல கைப்பற்றப்பட்டன.

இராணுவம் சென்ற வீதியில் 600 யார் இடைவெளிக்குள் 100 குண்டுகள் புதைக்கப்பட்டிருந்தன. [இ-மா]

## கிளிநொச்சி ஸ்தம்பித்தது; எங்கும் மயான அமைதி!

[யாழ்ப்பாணம்]

கொக்காவில் இராணுவ முகாமுக்கு அண்மையில்நிலக் கண்ணிவெடி வெடித்ததினால் ஆயுதப்படையைச் சேர்ந்த பலர் பலியானார்கள் என்றும் காயமடைந்தசிலர் ஹெலிகொப்டர்மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் தெரிகிறது.

காலையில் முருகண்டி, புத்துவெட்டுவான் பக்கம் பலத்த குண்டுச் சத்தங்கள் கேட்டதைத்தொடர்ந்து முருகண்டி, கிளிநொச்சிப்பகுதியிலுள்ளமக்கள் நாலா புறமும்சிதறி ஓடிப் பாதுகாப்புப் புகலிடங்களில் தஞ்சமடைந்தனர். கிளிநொச்சிநகர் வெறிச்சோடியதுசகல போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்தன.

கொழும்பு சென்றுகொண்டிருந்த வாகனங்கள் அவசர அவசரமாகக் கிளிநொச்சியுடன் பிரயாணத்தைத் துண்டித்து யாழ். திரும்பின.

கொக்காவில்பகுதியில் பதற்றம் ஏற்பட்டதை தொர்டந்து 5ம்திகதி நடைபெறவிருந்த பரீட்சைக்காக யாழ் நகரிலிருந்து கொழும்பு சென்ற பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்பு மாணவர்கள் நேற்று நண்பகல் கிளிநொச்சியுடன் யாழ்ப்பாணம் திரும்பினர்கள்.

இது இவ்வாறிருக்க இங்கிருந்து நேற்றுக்காலை சென்ற லொறிகளினதும் கொழும்பிலிருந்து யாழ் வந்துகொண்டிருந்தலொறிகளினதும் நிலைமைகள் பற்றித்தெரியாதிருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (கிளி. ஐ. க)

## பருத்தித்துறை 'ஷெல்' தாக்குதல்; ஒருவர் பலி, மற்றொருவர் காயம்

(புலோலி)

பருத்தித்துறை இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற மோட்டர் ஷெல் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களின் போது இளைஞர் ஒருவர் 2ம் குறுக்குத் தெருவில் பலியானனுர். சிவன் கோவிலில் ஆலயதரிசனம் செய்துகொண்டிருந்த பருத்தித்துறை நகரசபை வரிசேகரிப்பாளர் காயமடைந்தார்.

சில வீடுகள் சேதமடைந்தன

பருத்தித்துறை சிவன் கோவில் முன்றலில் தேர்முட்டிக்கு அருகாமையில் வந்து விழுந்த குண்டொன்று வெடித்ததுலேயே ஆலய முன்றலில் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்த நகரசபை ஊழியரான நாலு பிள்ளைகளின் தந்தை திரு. வை. சிவசுப்பிரமணியம் காயங்களுக்குள்ளானுர்

## இரு கோரிக்கைகள் ஏற்கப்பட்டன
## வேலைநிறுத்தம் தொடர்கிறது

(கா யோகநாதன்)

யா. ப. நோ. கூ. சங்க ஊழியரின் வேலைநிறுத்தம் தொடர்பாக நேற்று நடந்த பேச்சுவார்த்தையில் ஊழியர்களின் மூன்று கோரிக்கைகளில் இரு கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன மூன்றுவதுகோரிக்கையான ஊழியர் திரு எஸ். எஸ் மனேகரனுக்கு நிபந்தனையின்றி வேலைவழங்குவதுபற்றி இணக்கம் காணப்படவில்லை

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தலைவர் இரா. லோகநாதன், செயலாளர் திரு நா. த. இராசதுரை மற்றும்

(5ம பக்கம் பார்க்க)

## மர்மக்கப்பல்: ஆகாயரோந்து!

(மட்டக்களப்பு)

திருக்கோயில் கடற்பிராந்தியத்தில் மர்மக்கப்பலொன்று நடமாடியதையடுத்து மட்டக்களப்புக் கடற்பிராந்தியத் தீவிர கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முழுவதும் ஆகாயப்படை விமானமும், ஹெலிகொப்டர்களும் கடற் பிராந்தியத்தின் மேல் வட்டம் அடித்தபடி ரோந்தில் ஈடுபட்ட வண்ணமிருந்தன. (ஷ)

## தலைவர் ராஜினமா

[வண்ணார்பண்ணை]

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவர் பதவியிலிருந்து ராஜினமா செய்துள்ளார்.

சங்க நெறியாளர் குழுவிலிருந்து மற்றும் சிலர் இன்று விலகுவார்கள என எதிர் பார்க்கப்படுகிறது

யாழ். ப, நோ. கூ. சங்க ஊழியர் நேற்றும் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்தனர். யாழ் மின்சார நிலைய வீதியில், ஆஸ்பத்திரிக்குப் பின்னால் உள்ள சங்கத்தின் தற்காலிக தலைமைக் காரியாலயத்தின் முன் அமைக்கப்பட்ட பந்தலின்கீழ், நேற்றுச் சுலோக அட்டைகளுடன் அவர்கள் இருந்தனர்.

"22 லட்சம் ரூபா உணவு முத்திரை மோசடி பற்றிக் குரல் எழுப்பிய எம்மவருக்குக் கழுத்தறுப்பா?" போன்ற சுலோகங்கள் அட்டைகளில் காணப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் 5 மணி வரை வேலைநிறுத்தம் நடைபெற்றது. [க]

காங்கேசன், வட்டு. தொகுதிக் கிராமங்களில்

## 4 மணிநேரம் நடைபெற்ற ஆகாய, பீரங்கி தாக்குதல்

### அச்சத்தால் சிதறியோடிய மக்கள் மீது ஆகாயத்திலிருந்து எரிதிராவகம் வீச்சு!

[பண்டத்தரிப்பு நிருபர்]

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள பல கிராமங்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்தும், கடல் பீரங்கிப்படகிலிருந்தும் நேற்று நண்பகலிலிருந்து நான்கு மணித்தியாலங்கள் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. பீரங்கித் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இத்தாக்குதல் சம்பவங்களால் பீதி அடைந்து பாதுகாப்பான இடங்களைநாடி ஓடிய மக்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்து ரசாயன எரி திராவகம் வீசப்பட்டதால் பலர் பலத்த பாதிப்புக்குள்ளானர்கள்.

பீரங்கிப் படகிலிருந்து பீரங்கி வேட்டுக்களாலும் ஷெல்களாலும் தாககப்பட்டதால் 15 க்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன

வயலில் வேலைசெய்து கொண்டிருந்த விவசாயியான க. அருளானந்தம் [45 வயது] என்பவர் பலியானர். இவர் இளவாலைபத்தாவத்தையைச் சேர்ந்தவர் மேலும் 6 பேர் படுகாய முற்றனர்.

[5ம் பக்கம் பார்க்க]

# விளம்பரம்

## பயிற்சி

Computer Programming ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், எலக்ரிக்கல் வயறிங், வயின்டிங், வகுப்புக்கள் கூடிய நேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்சப்படுகின்றன. ஆரம்பம்: 06-04-86 விபரங்களிற்கு: Jaffna Technical Institute, 52/11, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமையில்) யாழ்ப்பாணம்.

C-1505

## தேவை

எமது ஆலயத்தில் பணிபுரிய நல்லபண்பும், ஒழுக்கமும், அனுபவமும் நிறைந்த மடப்பள்ளி வேலைக்கு ஒருவரும், பரிசாரகர் வேலைக்கு ஒருவரும் தேவை. விரும்புவோர் ஆலயத்துடன் கடிதமூலம் அல்லது நேரில் தொடர்புகொள்ளவும். கௌரவ செயலாளர், திருப்பணிச்சபை, திருக்கேதீஸ்வரம்.

A-535

யாழ்ப்பாணம் பெரியகடையில் அமைந்து இருக்கும் Fancey கடை ஒன்றுக்கு விற்பனையாளர் (பெண்) தேவை. ஆரம்ப சம்பளம் 350/- ரூபாய் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஒரு புகைப்படத்துடன் உடன் விண்ணப்பிக்கவும். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. விளம்பர இல. C-1550, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

C-1550

## வகுப்புகள்

ரேடியோ, ரீ. வி, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து- புதிய வகுப்புக்கள் 04-04-86, 05-04-86இல் ஆரம்பமாகின்றன. முதலில் சேருபவரிடம் குறைந்த கட்டணம் அறவிடப்படும். சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

C-1508

தொழில் புரிபவர்களின் வேண்டுதற்கிணங்க தொலைக்காட்சி பயிற்சி வகுப்புகள் 5-4-86 முதல் [சனி' ஞாயிறு நாட்களில்] பிரத்தியேகவகுப்பு நடைபெறும். தொடர்பு கொள்ளவும்: சி. குணாளன், ரெலிகோணர், சாவகச்சேரி.

[C1535]

## சேவை

யாழ். மக்களுக்கு ஓர் நற்செய்தி: புதிய நிர்வாகத்தின் கீழ் நவீன தங்குமிடம், உணவு வசதிகளுடன் மீண்டும்:- New Walkinn, 41/1. W.A. Silva Mawatha, Wellawatha. Reservation on Telephone No: 581017, Rs. 50/- upwards.

(A518)

## திடீர் இடமாற்றம்

[கொழும்பு]

கடந்த மாதப பதவி ஏற்ற வவனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திடீர் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

இப்பொலிஸ் அதிகாரி சம்பந்தமாகப் பிரஜைகள் குழுக்கள்உயரதிகாரிகளுக்குச்செய்த புகார்களை அடுத்தே இத்திடீர் இடமாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. [வா]

## கல்வி

சமூகக்கல்வி நூல் (ஆண்டு 9, 10, 11 புதியபாடததிட்டம்) வெளிவந்துவிட்டது. ஆசிரியர் க. குணராசா, ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(C 1498)

S. L. A. S. பரீட்சைக்குரிய பொதுவுளச் சார்பு, பொது அறிவு. கிரகித்தல் நூல்கள் வெளிவந்துவிட்டன. (ஆசிரியர் க. குணராசா) ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(C 1499)

## நன்றி நவிலல் ஆராதனை

காலஞ்சென்ற டாக்டர் எஸ்.டி ஐயாத்துரை அவர்களின் அருமை மனைவி கிறேஸ் ஜெயமணி (டோட்டி) 26-3-86 புதன்கிழமை காலமானார். அவரது நன்றி நவிலல் ஆராதனை 5-4-86 சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு 16, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளியில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் இவ்வாராதனையில் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

[C1553]

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம் வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள்வரை விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் காரியாலய நேரத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முடிவுத் திகதி: 9-4-1986.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

A-539

## பதவி வெற்றிடங்கள்

மன்னார், முல்லைத்தீவு, வவனியா, கிளிநொச்சி ஆகிய பஸ் சாலைகளிலுள்ள தகடு வேலையாளர் (Tinker), கம்மாளன் (Blacksmith) பதவி வெற்றிடங்களுக்காக அவ்வப் பகுதிகளில் நிரந்தரமாக வசிக்கும் பின்வரும் தகைமையுடைய பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

கல்வி: - குறைந்தது 5-ம் வகுப்புச்சித்தி.

வயது: - 22—45 வருடங்கள்

அனுபவம்: - தகடுவேலை, கம்மாள வேலை. (3 வருட அனுபவம்)

தகுதியுடையவர்கள் உரிய சான்றுப்பத்திரங்களுடன் (பிரதிகள்) தங்கள் விண்ணப்பங்களை ''ஆளணி முகாமையாளர், வடபிராந்திய போக்குவரத்துச்சபை, பலாலி வீதி, கோண்டாவில்'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 1986-04-10-ந் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

சி. கனகரத்தினம்,
தலைவர்/தகவுடை அதிகாரி,
வட பிராந்திய
போக்குவரத்துச் சபை.

1986-04-01.

A 536

## கேள்விப் பத்திர அறிவித்தல் மலைவேம்பு விற்பனை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தென்புற எல்லையில் தேவாலய வீதிக்கு அருகாமையிலுள்ள மலைவேம்பு மரத்தைத்தறித்து எடுத்துக்கொள்வதற்கான சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் 1986-04-9ம் திகதி காலை 10-00மணிக்கு முன்னர் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டது பற்றி அறிவித்தவுடன் அதற்குரிய பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்று இருநாட்களுக்குள்பாடசாலைக் கட்டிடத்துக்குச் சேதம் விளைவிக்காத வகையில் மரத்தை வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டும் கட்டிடத்துக்கு சேதம் விளைவிக்கும் பட்சத்தில் அதற்கான பெறுமதியை அறவிடுவதற்கு ஏதுவாக ரூ. 2000/–ஐ மேலதிகமாகச் செலுத்தவேண்டும். சேதம் விளைவிக்காத பட்சத்தில் இவ் வைப்புப்பணம் மீளளிப்புச் செய்யப்படும் கேள்விப்பத்திரங்களை இவ் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் தாங்களே வைப்புச்செய்யலாம் தபால் மூலம்அனுப்பும் கேள்விப்பத்திரங்களின் மேலுறையின் இடதுபக்க மூலையி ''மலைவேம்பு தறிப்பதற்கான கேள்விப்பத்திரம்'' என்று குறிப்பிடுதல்வேண்டும்.

வை. மு. பஞ்சலிங்கம்,
அரசாங்க அதிபரும்,
மாவட்டச் செயலாளரும்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
1-4-1986.

A-537

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், இல. 60, இராசாவின் தோட்டம் ரோட், காலஞ்சென்ற பிறைற் இராஜக்கோன் இராஜரத்தினம் என்பவரது மரணசாதனம் எழுதப்பட்ட சொத்துக்களுக்கு மரணசாதனத்துடன் கூடிய நிர்வாகத்தத்துவப் பத்திரம் வழங்கும் விடயத்தில்

- மரணமெய்தியவர்.

வழ. இல:
தத்துவம்/3948

ஈ. ஏ. பூபாலசிங்கம் கைம்பெண் கிளேரு மேபல் அதிசயமலர், இல. 60, இராசாவின் தோட்டம் ரோட், யாழ்ப்பாணம்.

- மனுதார்.

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு இணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 16ந் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றது.

1986ம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்;
அ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.

C 1525

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைதடி சித்தவைத்தியப் பகுதியிற் சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 17-04-86 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-உம், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 25/-உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களை இப் பல்கலைக்கழகத்தின் நலச் சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியால நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

31-03-86

A 534

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி

### சிதம்பரப்பிள்ளை கணேசலிங்கம்

அன்னையின் மடியில்:
21-06-1950
இறைவன் மடியில்:
13-04-1985

ஆண்டு ஒன்று சென்றாலும் அன்னாரின் நினைவுகள் விட்டகலாது அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு,
மனைவி
கணேசலிங்கம் ஸ்ரீவனஜா,
பிள்ளைகள்.

அல்வாய்.

C 1504

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி விஜயசிவகாம சௌந்தரி பொன்னுத்துரை

எங்கள் அன்புக்கும் நன்றிக்கும் மதிப்பிற்கும் வணக்கத்துக்குமுரிய எமது அருமைத் தாயாரை நினைவு கூருகின்றோம்.

அன்புள்ள புத்திரிகள்,
திருவும், கதிரும்.

வைத்தியநாத உடையார் வளவு,
ஆனைக்கோட்டை.

C 1534

## தேவை

நல்ல நிலையிலுள்ள நான்கு ஸ்ரீ தொடரிலக்கம் கொண்ட 'ஹில்மன் கார்' ஒன்றுடன் மாற்றீடு செய்து கொள்ள நற்தரத்திலுள்ள 'மொறிஸ் மைனர்' கார் ஒன்று தேவை. மேலதிக தரப்பெறுமதி வழங்கப்படும். விளம்பர இல. A-541, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு உடன்தொடர்புகொள்ளவும்.

A-541

## தேவை

ஒரு நாள் அல்லது ஒரு மாதம் நிரம்பிய
500 பேட்டுக் கோழிக்குஞ்சுகள்
உடன் தேவை.

தொடர்பு கொள்ளவும்:
R. ஜீலராஜன்,
APAT GROUP,
ஐஸ் பிளான் ரோட், குருநகர்.

(C 1544)

## அன்பான வேண்டுகோள்

25-3-86ல் இனந்தெரியாத நபர்கள் அவசர தேவைக்கென எனது 7 ஸ்ரீ 1658 OXFORD காரை எடுத்துச் சென்றனர். கிராம முன்னேற்றச் சங்கம், சமாதான சபை, ஆலயம், சாயிசேவா சங்கம் ஆகிய பல சேவைத் தலைவராய் தொடர்ந்து பணியாற்றுவது தடைப்படுகிறது. தயவுசெய்து வாகனத்தைத் தந்துதவவும்.

பொன்னுத்துரை
உரும்பராய்.

[1552]

## யாழ். சட்டக்கல்வி நிலையம்

மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

First in Laws (சட்ட முதற்பரீட்சை) விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. க. பொ. த. உயர்தரம் சித்தி பெற்றோர் அனுமதிக்கப்படுவர்.

C-1537

பதிவாளர்,

உலகச் செய்திகள்

## விமானத்திலிருந்து 'பாரசூட்' இன்றிக்குதிப்பது போல்

# எண்ணெய் விலை வீழ்ச்சி!

## அமெரிக்க உபஜனாதிபதி பெருங்கவலை!!

வாஷிங்டன், ஏப் 2

**''விமானத்திலிருந்து ஒருவர் 'பாரசூட்' இன்றிக் குதிப்பது போல் எண்ணெயின் விலையும் படு மோசமாக வீழ்ச்சியடைந்து வருகிறது. அமெரிக்காவின் உள்நாட்டு நிதி நிலைமையை இந்த வீழ்ச்சி பெரிதும் பாதிப்படையச் செய்கிறது''என்று அமெரிக்க உப ஜனாதிபதி திரு.ஜோர்ஜ் புஷ் கருத்து வெளியிட்டுள்ளார்.**

சர்வதேச சந்தையிலும் கூடவே அமெரிக்காவிலும்எண்ணெய் விலை கடந்த 10ஆண்டுகளில் என்றுமில்லாதவாறு மிக மோசமாக வீழ்ச்சியடைந்து செல்லுகின்றது. இந்த வீழ்ச்சியைக் கட்டுப் படுத்துவதில் 'ஒபெக்' நாடுகள் தோல்வி கண்டுள்ளன.

அமெரிக்காவில் ஒரு பரல் எண்ணெயின் விலை 10 டாலர்களுக்கும் குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளது. அமெரிக்கச் செனட்டர்களும், காங்கிரஸ் உறுப்பினர்களும் இதுகுறித்து றீகன் நிர்வாகத்தைச் சாட ஆரம்பித்துள்ளனர்.

இதனையடுத்தே அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் இவ் வீழ்ச்சி குறித்துக் கவலை வெளியிட்டுள்ளார்.

''முதல்தர எண்ணெய் உற்பத்தி நாடான சவூதிஅரேபியா இந்த விலை வீழ்ச்சியைத் தவிர்க்க உடன் ஆவன செய்ய வேண்டும். இல்லையேல் அமெரிக்காவின் உள்நாட்டுப் பொருளாதாரம் வெகுவாகப் பாதிப்படையும்.

''அமெரிக்காவிலுள்ள தனியார் எண்ணெய்க்கம்பனிகள், எண்ணெய்க் கைத் தொழில் நிறுவனங்கள், அகழ்வு நிலையங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் உற்பத்திப் பிரிவுகள் என்பன இந்த விலை வீழ்ச்சியால் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளன இந்த வீழ்ச்சி காரணமாக அமெரிக்க நிதி நிலைமையிலும் பலத்த நெருக்கடி தோன்றுவதுடன் அரசியல் ரீதியாகவும் பலத்த தாக்கம் ஏற்படும் நிலைமை தோன்றியிருக்கிறது'' என்று திரு.புஷ் கூறினார்

தாம் அடுத்த வாரம் சவூதி அரேபியா செல்லவுள்ளதாகவும் அப்போது இந்த வீழ்ச்சி பற்றி நேரில் முறையிடவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (கி)

---

சோவியத்தில்

## பூட்டோ மகள் பெனாஸிர் ஆப்கான் தலைவர் சந்திப்பு!

மாஸ்கோ, ஏப் 2

முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோவின் மகளும், அந்நாட்டின் தற்போதைய மக்கள் கட்சித் தலைவியுமான செல்வி பெனாஸிர் பூட்டோ மாஸ்கோவில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி திரு. பார்பரா கார்மாலைச் சந்தித்தார்.

இச் சந்திப்பை சோவியத் அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. திரு. பர்பரா கார்மால் உத்தியோகபூர்வமற்ற விஜயமொன்றை மாஸ்கோவிற்கு மேற்கொண்டிருந்தார். செல்வி பெனாஸிர் பூட்டோ லண்டனிலிருந்து அங்கு வந்திருந்தார்.

இவர்களின் சந்திப்பு விபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை ஆயினும் விரைவில் தாயகம் திரும்பவுள்ள செல்வி பெனாஸிர் பூட்டோ, தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்தே சோவியத் மற்றும் ஆப்கான் தலைவருடன் ஆராய்ந்திருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

செல்வி பூட்டோ பாகிஸ்தானில் தீவிர அரசியல் நடவடிக்கைகளில் இறங்கவிருப்பதாக அறியப்படுகின்றது. (கி)

---

## இனஒடுக்கல் பட்டியல்: பல்கேரியாவில் 'துருக்கி இனம்' ஒருபுதியசேர்க்கை!

லண்டன், ஏப் 2

பல்கேரியாவில் உள்ள துருக்கிய சிறுபான்மை இன மக்கள் பெரும் இன ஒடுக்கல் கொடுமைகளுக்குள்ளாகியுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச்சபை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. சுமார் 100 துருக்கியர்கள் இக்கொடுமைகளில் கொல்லப்பட்டுள்ளனர் மேலும் ஆயிரக் கணக்கானவர்கள் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

பல்கேரியாவில் பத்துவீதமான மக்கள் துருக்கிய இனத்தவர்களாவர். இவர்கள் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். பல்கேரியாவிலிருந்து புறம்பான கலாசார, பழக்கவழக்க, ஆடை அணிகலன் முறைகளை அவர்கள் கொண்டுள்ளனர்.

14ம் நூற்றாண்டில் பல்கேரியாவினுள் இந்த துருக்கிய இனம் குடிகொண்டதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது ஆனால் பல்கேரியா இதனை மறுத்துள்ளது.

ஆதிகால பல்கேரியர்களே துருக்கியர்களாக இனம் மாறி, இஸ்லாம் மதத்தைத் தழுவி மொழி, பண்பாடுகளை மாற்றியுள்ளனர் என்று தெரிவித்துள்ளது

எனவே அவர்களை மீளவும் பல்கேரிய இனத்தவர்களாக்க முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது

இதன் அடிப்படையிலேயே பல்கேரியத் துருக்கியர்கள்மீது கொடுமைகள் புரியப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை கூறியுள்ளது.

துருக்கிய இனத்தவரின் கிராமங்கள் பல்கேரியப் படைகளால் சுற்றிவளைக்கப்படுகின்றன. அவர்களின் மத, கலாச்சார உணர்வுகளைப் புண்படுத்தும் நடவடிக்கைகள் இப்படைகளால் மேற்கொள்ளப்படுகின்றன. துருக்கிய மொழி பேசினால் கடுந்தண்டனைகள் விதிக்கப்படுகின்றதாம். (கி)

---

பயங்கரவாத ஒழிப்பு

## பிரிட்டன் நிலையில் சஞ்சலம்; சந்தேகத்துக்கு இடமில்லை!

புதுடில்லி ஏப் 2

''சர்வதேச பயங்கரவாதத்தை வேருடன் ஒழித்துக்கட்டுவது என்ற பிரிட்டனின் நிலைப்பாட்டில் சஞ்சலத்துக்கோ, சந்தேகத்துக்கோ இடமில்லை'' என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சேர் ஜெவ்ரி ஹோவ் கூறியுள்ளார்.

சேர் ஜெவ்ரி இந்தியப் பிரதமருடன் நேற்று உரையாடினார். இதனையடுத்து அவர் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

''அவர் மேலும்கூறியதாவது பிரிட்டனில் தஞ்சமடையும் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளை கையாளுவதற்குப்பிரிட்டனின் பயங்கரவாத ஒழிப்புச் சட்ட விதிகள் போதுமானவையாகவுள்ளன

''பிரிட்டனில் தஞ்சமடைய முற்படும் பயங்கரவாதச் சந்தேகநபர்கள் மற்றும் அங்கு அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து பிரிட்டிஷ் அரசு விழிப்பாக இருந்து வருகிறது.

''பிரிட்டனின் பயங்கரவாத ஒழிப்புச் சட்டம் ஐரோப்பாவுக்கு வெளியே இந்திய நாட்டுக்கே முதலில் ஏற்புடையதாக இருக்கிறது. இச் சட்டத்தின் மூலம் போலி அரசியல் காரணங்களை முன் வைத்து பயங்கரவாதிகள் அரசியல் தஞ்சமடைவதையும் தவிர்க்க முடியும்''என்றார்.

1980ம்ஆண்டுக்குப் பின்னர் பிரிட்டன் இந்தியர் எவருக்கும் தஞ்சமளிக்கவில்லை எனவும் சேர் ஜெவ்ரி தெரிவித்தார். (கி)

---


# இதோ ஓர் நற்செய்தி

பாவனையாளர்களின் நலன் கருதி மீண்டும்

**றெபின் சோப்களின்** விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| றெபின் பார் சோப் | பழைய விலை | 13-75 | புதிய விலை | 12-50 |
| றெபின் வெள்ளை சோப் | ,, | 2-25 | ,, | 2/- |
| றெபின் நீலசோப் | ,, | 2-25 | ,, | 2/- |
| றெபின் பேபி வெள்ளை 50 துண்டுகள் பைக்கற் | | 42-50 | ,, | 40/- |
| றெபின் பேபி நீலம் 50 துண்டுகள் பைக்கற் | | 45/- | ,, | 42 50 |

வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

**கவனிப்பு:** விலைக்குறைப்பின் நிமித்தம் வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தினை நிவர்த்தி செய்யும் பொருட்டு எங்களின் விற்பனை முகவர்கள் உங்களுடன் தொடர்பு கொள்வார்கள் என்பதையும் அறியத்தருகிறோம்.

நன்றி

**பெனின்சுலா சவர்க்காரத் தொழிலகம்**

9, கண்டி வீதி, நாவற்குழி.

(A 421)


---

## வன்முறையின் வருமானம் 1000 மி. டாலர்கள்!

வாஷிங்டன், ஏப் 2

அமெரிக்காவில் திட்டமிட்டு செயல்ப்படும் பயங்கரவாத இயக்கங்கள் கடந்த ஆண்டில் ஆயிரம் மில்லியன் டாலர்கள் வரை வருமானம் ஈட்டியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த இயக்கங்களில் 'மாபியர்' பயங்கரவாதிகளே முன்னணியில் இருக்கின்றனர் எனவும், இவர்களைத் தொடர்ந்து அமெரிக்காவில் உள்ள சீனக் குண்டர்கள் கோஷ்டியினரும், மோட்டார் சைக்கிள் கடையர்களும் முக்கியம் பெறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று மேற்கண்ட விபரங்களை வெளியிட்டுள்ளது. திட்டமிட்டுச் செய்யப்படும் வன்முறைகளில் கொலை, கற்பழிப்பு கொள்ளை ஆகியவற்றுடன் போதைவஸ்துக் கடத்தலும் சமநிலையில் நிற்பதாக அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பொலிஸ் பிரிவுகள் எத்தகைய விழிப்பாக இருந்தாலும் அவற்றை இலகுவில் ஏமாற்றும்வகையில்பல

[7ம் பக்கம் பார்க்க]

**மணி வாக்கு**

அன்றுமுதலின்றளவு மறியாப் பருவமதில்
என்றும் பொதுவாயிருந்த நிராமயன் காண்.
—பட்டினத்தார்

# நமது நோக்கு

## ஆசிய கப்

உலக்கை தேய்ந்து உழிப்பிடியான கதை யாவரும் அறிந்ததே.

அது ஒரு காலம் உலக்கையாக இருந்ததென்ருவது ஆறுதலடையலாம்.

பலவருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் பெரிய கடையில் சர்வதேச சிற்றுண்டி நிலையம்(International Restaurant) ஒன்றிருந்த நினைப்பு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் ஒரு ஆமான ஹோட்டல் இல்லாத காலத்திலேயே சோற்றுக் கடைகள் பல ஹோட்டல் என்ற விலாசத்தை தாராளமாகப் பரிமாறின.

சர்வதேச சிற்றுண்டி நிலையம் இந்த சாதனையையும் முறியடித்தது. மிக ஆவலுடன் அதற்குள் புகுந்த நண்பர் சிலர், அங்கு ஒரே ஒரு தேச மக்கள் காணப்பட்டதையும் அவர்களின் தோசை, வடை, இட்லியையும் பார்த்துப் பிரமித்தனராம்.

அந்த இடத்தில் எழுந்த விகட விவாதத்தில் ஒரே ஒரு நாட்டில் ஒருபகுதியில் வாழும் மக்களுக்குரிய நிலையத்துக்கு இந்த வியாபகமான பெயர் எவ்வாறு பொருந்தும் என்பது கேள்வி.

அதற்கு சமாதானமாக அங்கு நான்குநாடுகள் காட்டப்பட்டன. எல்லோரும் யாழ்ப்பாணத் தமிழராக இருந்தபோதும் அங்கு இல்லாத முதலாளி ஒரு சிங்களவரென்றும், வேலை செய்பவர்கள் சிலர் தென் இந்தியத் திராவிடத் தமிழரென்றும் அவர்களில் ஒருவர் காப்புலியைப் போன்ற கறுப்பர் ஆகையால் அவரை 'அபி சீனியன்' என்ற பட்டப்பெயர் உடையவரென்றும் வியாக்கியானம் வழங்கப்பட்டது.

பிரிவினை பேசப்படாத காலம் அது. அக்காலத்தில் இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி ஆபிரிக்க நாடாகிய அபிசினியாவை கேட்டுக் கேள்வியின்றிக் 'கற்பழித்தார்'. எனவே சாதாரண மனிதனுக்கே இந்த நாடு தெரிய வந்தது.

நான்கு நாடுகளைக் கற்பனை செய்து ஒரு சர்வதேச கிளப் ஆரம்பிக்க முடியுமானல், இன்று கொழும்பில் நடைபெறும் ஆசிய கப் கிரிக்கட் போட்டியில் மூன்று நாடுகள் பங்குபற்றுவது போதாதா?

உலக்கை தேய்ந்த கதை எவ்வாறு பொருந்தும் என்ற கேள்வி எழலாம?

அது ஆராய்வதற்குரிய விடயம். இன்று போட்டியில் ஈடுபடும் ஆசிய நாடுகள் மூன்று. இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆசியாவே உலகில் மிகப்பெரியகண்டம்; அதன் இரு பெரும் ''இராட்சத'' தேசங்கள் இந்தியாவும், சீனவுமாகும்.

சீன கிரிக்கட் விளையாடுவதில்லை. ஆனல் உதைபந்தாட்டத்தில் அது ஏற்படுத்திய பயங்கரவாத வன்செயல்கள் அனைத்தையுமே அதிர வைத்தது. இந்தியா இன்றைய போட்டியில் கலந்து கொள்ளவில்லை.

தெற்காசியாவின் 'சார்க்' ஏழு நாடுகளைக்கொண்டது. அவற்றுள் மூன்று தான் 'ஆசிய கப்புக்கு' ஆடுகிறது. சில மாதங்களுக்கு முன்னிருந்த உலக்கை இன்று உழிப்பிடியாயிற்று.

ஆசிய கப் என்ருல் பல நாடுகள் ஒன்ருயிருந்து உண்ணக்கூடிய பிரமாண்டமான கோப்பை கற்பனைக்கு இடமளித்தது. ஆனல் ஏமாற்றம்! பண்டைக்காலப் பாரதத்தின் எச்சங்கள் இம்மூன்றும் என்ருல் அது தவரு?

இந்தியா பங்குபற்ருததையிட்டு ஜனதிபதி ஜெயவர்த்தனவே தம்முடைய தொடக்கவுரையில் கவலை தெரிவித்தார்.

கவலைக்குக் காரணமென்ன?

''ஆங்கிலேயருடைய விளையாட்டை ஆசியநாடுகள் நன்ருக அவர்களிலும் திறமையாக விளையாடுகின்றன'' என்றும் ஜனதிபதி குறிப்பிட்டிருந்தார் இந்தப்புகழுரை ஆதியிலே இந்தியாவின் றஞ்சிற்சிங் பிரிட்டிஷாரிடமிருந்து பெற்றது இன்றும் நினைவூட்டப்பட்டிருக்கிறது.

ஆசிய நாடுகளில் குறிப்பாக எங்கள் நாட்டில் விளையாடப்படும் கிரிக்கட் பாரபட்சமற்ற மத்தியஸ்தம் வேண்டிநிற்கிறது.

அரசியலிலேயே இந்திய மத்தியஸ்தம் இலங்கையிலேயே மேடேறிநிற்கும் வேளையில் விளையாட்டில் அதனை எதிர்பார்க்க முடியுமா?

அண்மையில் பிடித்த பிள்ளையார் இவ்வளவு விரைவில் பெருச்சாளியானது கவலைக்குரியதென்று ஜே. ஆர். நினைத்திருப்பார்.

மானத்தைக்காக்க மூன்று நாடுகள் ஒற்றுமைப்பட்டது பாராட்டுக்குரியது. இனத்தால் வேறுபட்டாலும் ஜனநாயகம் என்று சொல்லிக் கொள்ளும் இலங்கைக்கும் மாஷல்லோ ஆட்சிக்குரிய பாகிஸ்தானுக்கும், பங்களாதேசுக்கும் ஒற்றுமையொன்று உண்டு, எதிர்க்கட்சி தலைவர்களாக ஆட்சியைக் கைப்பற்ற காத்திருப்பவர்கள் பெண்கள் மூவரென்றறிக.

### நகுலேஸ்வரம் தேவி உற்சவம்

[கீரிமலை]

கீரிமலை நகுலேஸ்வர ஆலய தேவி மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

காலையில் தேவியை எழுந்தருளச் செய்து 10 மணிக்கு மேல் கொடியேற்றமும் இரவு நவசந்தி ஆவாகனம் இடம் பெறும்.

13-ம் திகதி ஞாயிறு மாலை மஞ்சத் திருவிழா நடைபெறும்.

அடுத்தநாள் திங்கள் காலை 8 மணிக்கு வசந்த மண்டபபூசை நடைபெற்று தேவி ரதத்தில் எழுந்தருளுவார். பிற்பகல் 2 மணிக்கு தேவி பச்சை சாத்தி யதாஸ்தானத்துக்கு எழுந்தருளுவார்.

# அப்பர் சுவாமிகள் பவனி விழா



யாழ். இந்துக்கல்லூரியினரால் மிகுந்த பக்திசிரத்தையுடன் உபசரிக்கப்பட்ட அப்பர்சுவாமிகள் திருவுருவம், யாழ்ப்பாணத்தில் பவனி விழாவை நிறைவேற்றி விட்டு தற்பொழுது நல்லூர் ஆதீனத்தில் தங்கியுள்ளது. பவனி விழா என்றுமில்லாத முறையில் மிகுந்த சிறப்புடன் நடைபெற்றது என்பதும் ஆலயங்களும் கல்லூரிகளும் தனிப்பட்ட சைவ அன்பர்களும் பூரண குடும்பங்கள் முதலியன வைத்து, மங்கல வாத்தியங்கள் சகிதமாக சுவாமிகள் திருவுருவத்திற்கு வரவேற்பு உபசாரங்கள் நடாத்தி வழிபட்டு விழாவினைச் சிறப்பித்தனர் என்பதும் கண்ணுற் கண்டவர் அனைவரும் அறிந்ததே. மேற்படி விழாவில் சிவாச்சாரியார்கள் புராணபடன வித்தகர்கள், தேவார பஜனை கோஷ்டியினர், ஆசிரியர்கள், மாணவர்கள் தத்தமக்குரிய துறைகளில் தொண்டாற்றி தமக்கு இக்கால கட்டத்தில் ஏற்பட்டிருக்கும் இன்னல்களையெல்லாம் இறைவனுக்கு முறையிட்டு லோக க்ஷேமத்தின் பொருட் பிரார்த்தனைகள் நடாத்தினர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அப்பர் சுவாமிகளை யானை வாகனத்தின் மீது ஏற்றி வாகனக் கொம்புகளைத் தாங்கிச் சுமந்து வந்து, இளம் தலைமுறையினராகிய சைவ மாணவர்கள் ஆற்றிய பெரிய பணியை நாங்கள் ஒருவரும் மறக்கமுடியாது. ஏனெனில் அவர்களே சைவ சமயத்தின் வருங்காலப் பெருந் தொண்டாய்த் திகழ இருப்பவர்கள்.

சமயங்களெல்லாம் தடுமாறுற்று தத்தளிக்கும் இக் கால கட்டத்தில் சைவசமயத்தின் இரண்டு அடிப்படைக் கொள்கைகளை சைவ இளந் தலைமுறையினர் பொருட்டு இவ்விடத்தில் சமர்ப்பிக்க விரும்புகின்ருேம்.

எங்கள் எல்லோர்க்கும் மேலாக இறைவன் ஒருவன் உளன் என்பதை நன்கு தெளிந்து, அந்த இறைவனை வணங்கி சமய ஆத்மீக வாழ்வு வாழ ஒவ்வொரு வரும் முயல வேண்டும் என்பது ஒன்று. அனைத்துயிர்களிடத்திலும், அந்த மேலான இறைவன் பிரியாதிருக்கின்ருன் என்பதை உணர்ந்து. யாதோருயிரையும் கொல்லாது, கொன்று தின்னுது மேலான சைவவாழ்வு வாழ ஒவ்வொருவரும் இயன்றளவு முயல வேண்டும் என்பது மற்றையது. குறித்த இரண்டு கொள்கைகளையும் நன்கு விளங்கி, எம் வாழ்வில் அனுஷ்டித்து வருவோமாகில், அப்பர் சுவாமிகளின் திருவருள் நெறி நமக்கு சித்திக்கும் லோக க்ஷேமம் கைகூடும்.

யாழ்ப்பாணப்பூமியில் வாழும நாங்கள் ஏனைய நாட்டினர்க்கும் நல்ல வழிகாட்டிகளாய்த் திகழும் நிலை ஏற்படும்.

நல்லை ஆதீனத்தில் தங்கியிருக்கும் அப்பர் சுவாமிகள் திருவுருப்பவனி ஏப்ரல் மாதம் 16 ம் திகதி ஆதீனத்திலிருந்து திருக்கேதீச்சரம் நோக்கிப் புறப்படும். பவனி செல்லும் வழியில் பூநகரி கந்தசுவாமி கோவிலில் 5 தினங்களும் முழங்காவில் பிள்ளையார் கோவிலில் 7 தினங்களும் இலுப்பைக் கடவை கட்டாடி வயல் கந்த சுவாமி கோவிலில் 4 நாட்களும் தங்கும். திருக்கேதீச்சரம் செல்லும் வழியில் அப்பர் சுவாமிகள் திருவுரு தங்கியிருக்கும் இடங்களில் அயற் கிராமத்தவர்வந்து தரிசித்துபுராண படனம் முதலியவற்றிலும் பங்கு கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மே முதலாம் தேதியளவில்பவனி திருக்கேதீச்சரத்தை அடையும். மே 3 ம் திகதி அப்பர் சுவாமிகள் குருபூசை திருக்கேதீச்சரத்தில் விமரிசையாக நடைபெறும்.

மு. ஞானப்பிரகாசம்
திருக்கேதீச்சரம் திருப்பணிச் சபைத் தலைவர்

## ''ராணுவத்தை வாபஸ்பெற்று சுமுக வாழ்வை ஏற்படுத்துக''

### வல்வெட்டித்துறை பிரஜைகள்குழு மகஜர்

[யாழ்ப்பாணம்]

''அரசு இந்நாட்டின் தமிழ்ப் பகுதிகளை ஆளும் உரிமையை விரைவாக இழந்து வருகிறது என்பது மிகத் தெளிவாகிக் கொண்டிருக்கிறது. தமிழருக்கு எதிராக அரசு மிகவும் பாரபட்சமான மனப்பான்மை கொண்டிருப்பதனல் பெரும்பான்மை சமூகத்தவரின் நலன்களில் மட்டுமே அக்கறை கொண்டு செயற்பட்டு வருகின்றது. தமிழ்மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பற்றித்தானும் ஆலோசிக்கும் தகுதிதனக்கில்லை என்பதையும் அரசுவெளிப்படுத்தி வருகிறது.''

இவ்வாறு வல்வெட்டித் துறை பிரஜைக்ள்குழு ஜனதிபதி திரு, ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது.

அரச படைகள் செய்துவரும் அட்டூழியங்கள் தொடர்பாக தாங்கள் செய்துகொண்ட முறைப்பாடுகள் குறித்து அரசிடமிருந்து ஊக்கமளிக்கும் விதத்தில் எதுவித பதிலும் கிடைக்காமை குறித்து குழு கவலை தெரிவித்துள்ளதுடன் பெரும்பாலான சம்பவங்கள் தொடர்பாக உண்மையை விளக்கிய பின்பும் கூடஅவைகளை அரசு மறுத்துள்ளது என்றும் அல்லது பயங்கரவாதிகளின் நடவடிக்கை என்று தட்டிக் கழித்துள்ளது என்றும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது

வீடமைப்புத் திட்டத்திற்கு அரசு முதல் முக்சியத்துவம் கொடுத்திருக்கும் அந்த வேளையில் தமிழ்ப்பகுதிகளில் ஏராளமான வீடுகள் ஆயுதப் படையினல் அழிக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் வீடுகளை விட்டு அகதிகளாக வெளியேறி ஓடநேருவதாகவும் குறிம்பிடப் பட்டுள்ளதுடன் மீன்பிடித் தொழிலும விவசாயமும் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்பகுதிகளில் இன்று நிலவும் நிலைமைகளை விளக்கியுள்ள மகஜர் தமிழ்ப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை உடனடியாக வாபஸ் பெற்று தமிழ் மக்கள் தங்கள் விவகாரங்களைத் தாமே பார்த்துக் கொண்டு ஏனையபகுதியிலுள்ள மக்களுடன் சுமூகமாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் ஒரு அரசாங்க அமைப்பை உருவாக்கி போதுமான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

### புத்தாண்டில் கூட்டு அர்ச்சனை

[யாழ்ப்பாணம்]

புத்தாண்டு தினத்தன்று 14ம் திகதி ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள்தேவஸ்தானத்தில் கூட்டு அர்ச்சனை ஒன்று நடைபெறவுள்ளது:

இவ்வர்சனை ஸ்ரீதேவி, பூமி தேவி சமேத ஸ்ரீ வெங்கடேச வரதராஜமூர்த்திக்கும், ஸ்ரீ மகாலெட்சுமிக்கும், நவக்கிரகமூர்த்திகட்குமாக செய்யவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் முன்கூட்டியே தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர் (பி)

### செங்குந்தா இந்துவுக்கு புதிய நூலகம்

[யாழ்ப்பாணம்]

இவ்வாண்டு பொன்விழாக் காணும் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரிக்கு பழைய மாணவர் மன்றத்தின் முயற்சியினல் ரூபா 75 000/- செலவில் புதியதோர் நூலகம் அமைக்கப்படவுள்ளது இக் கல்லூரியில் நீண்டகாலம் அதிபராகப் பணிபுரிந்த அமரர் ந. கணபதிப்பிள்ளையின் ஞாபகார்த்தமாக இந்நூலகம் அமையும்.

பொன் விழாவினையொட்டி சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படவுள்ளது. இவ்வாண்டு இறுதியில் நடைபெறும் பொன் விழாக் கொண்டாட்டங்களை ஒழுங்குசெய்வதற்கென திருவாளர்கள் க. பரராஜசிங்கம், எஸ். திருச்செல்வம், க. பாலசுந்தரம், இ சண்முகநாதன், சோ. சிங்காரவடிவு, இ. குமரகுரு ஆகியோரை உள்ளடக்கிய உப குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

## கைதான விளையாட்டு அதிகாரி விடுதலை

(வவனியா)

ஆயுதப்படையினரால் வவனியாவில்வைத்துக் கைது செய்யப்பட்ட நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரி திரு மு ஆனந்தகுமார் நேற்றுவிடுவிக்கப்பட்டார்.

மற்றும் இ. சத்தியசீலன், பொ ஆதிமூலம் ஆகியோரும் விடுவிக்கப்பட்டனர். (வா)


### கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

புரொய்லர் குஞ்சுகள் சேவல் குஞ்சுகளுக்கு மற்பணம் செலுத்தியவர்களுக்கு 4/4/86 வெள்ளிக்கிழமைகோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில்

C 1568

### தவறிவிட்டது

பரமானந்தன் உதயணன் என்பவருடைய 682020393 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை சுன்னாகம் நவீன சந்தைக்கருகில் 27/3/86 இல்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ''மங்களபவான்'' கந்தரோடை, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

C 1556

B U 1409 இலக்கமுடைய பழைய மொடல் றலி சைக்கிள் ஒன்று, 40/2, கோவில் வீதி, சுண்டுக்குளி இல்லத்தில் இருந்து 1/4/86 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

C 1558

வீ. வீரராகவன் இல. 10 இராமகிருஷ்ண அவனியூ கொழும்பு 6, என்பவருடைய அடையாள அட்டையும் (இல. 322562616 V இன்னும் சில பத்திரங்களும் கொண்ட கறுப்புநிற மணிப்பர்சும் காணாமல் போய்விட்டது. இதை கண்டெடுப்பவர்கள் தயவு செய்து 79, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்

C 1557

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30, 9-15
தியாகராஜன்—ஜெய்சங்கர்
**மச்சக்காரன்**

5வது வாரம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
கமல்-ஸ்ரீதேவி-ரஜனி
**16 வயதினிலே**
புதிய பிரதி (கலர்)


## இரு கோரிக்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டணக்கிளையின் மூன்று பிரதிநிதிகளுடன் நேற்றுக் காலை கூட்டுறவுச் சிரேஷ்ட ஆணையாளர் திரு கே. சண்முகலிங்கம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சங்கநிர்வாகத்தினால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் அமுல் செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு இணக்கம் காணப்பட்டது.

வாழ்க்கைப்படி 102ரூபாவை இவ்வருடம் ஜனவரி முதல் வழங்குவதென்றும், ஜூன் மாதம் முதல் வாழ்க்கைப்படி 56 ரூபாவை வழங்குவதென்றும் ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டு அதற்கான ஒழுங்குகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டனர்.

நிபந்தனையின்றி திரு. மனோகரனுக்கு வேலைவழங்குவதை விரும்புகிறீர்களா அல்லது தற்போதைய நிர்வாகம் தொடர்ந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா என்றுதொழிற்சங்கப்பிரதிநிதிகளிடம் உதவி ஆணையாளர் கேட்டபோது, இரண்டுக்கும் விருப்புவதாக தெரிவித்தனர்

இதில்ஒன்றைத்தான் செய்ய முடியும் எனத்தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டது

ஊழியர் திரு. எஸ். எஸ். மனோகரனுக்குநிபந்தனையின்றி வேலைவழங்குவதுபற்றி இன்று பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அநேகமாக இன்று பிற்பகல் சுமுகமான முடிவு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## காங்கேசன் வட்டு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளவாலை, மாரீசன்கூடல், சிறுவிளான், பண்டத்தரிப்பு, சேந்தான்குளம் ஆகிய பகுதிகள் இத்தாக்குதலுக்கிலக்காயின.

## ஹெலிக்கொப்டரில் இருந்து 'வான்'மீது குண்டு

சேந்தான் குளப் பகுதியில் சென்றுகொண்டிருந்த வான் மீது ஹெலிகொப்டரிலிருந்து குண்டு வீசப்பட்டதால் அந்த வான் முற்றாக எரிந்துவிட்டது,

இளவாலை கன்னியர் மடவளவிற்குள் விழுந்த குண்டொன்று வெடித்தபோதிலும் தெய்வாதீனமாக எதுவித சேதமும் ஏற்படவில்லை

ஹெலிகொப்டரிலிருந்து திராவகம் வீசப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களுள் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளார் திராவக வீச்சைத்தொடர்ந்து அவரது கைகால்கள் வழங்கவில்லையாம். தனியார் ஆஸ்பத்திரிகளில் மற்றவர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறியுள்ளனர். (மா)

## பிந்திய செய்தி
## மனோகரன் விஷயத்தில் சமரசம்

(யாழ்ப்பாணம்)

''எவ்வித நிபந்தனையுமின்றி மனோகரன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்காகத் தொடர்ந்து சேவை செய்வார் எனில் அவரை மீளவும் வேலை செய்ய அனுமதிப்பதெனத் தீர்மானித்துள்ளோம்'' என யாழ் மாநகர ப. நோ. கூ. ஊழியர் சங்கம் நேற்று முன் தினம் மேற்கொண்ட வேலைநிறுத்தம் தொடர்பாக நிர்வாக சபை எடுத்த தீர்மானங்களில்ஒன்று கூறுகிறது.

## 5ம் திகதிக்கு முன் பண்டிகை முற்பணம்

[கொழும்பு]

பண்டிகைக்கான சம்பள முற்பணம் சகல ஊழியர்களுக்கும் இம்மாதம் 5ம் திகதிக்குமுன் கொடுக்கப்படுவதைச் சகல அமைச்சர்களும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன கேட்டுள்ளார்.

மேற்படி தகவலை இராசாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர்பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார். [வா]

## இன்று அங்குரார்ப்பணம்

[யாழ்ப்பாணம்]

அகில உலக சென் ஜோன் அம்புலன்ஸ் படைவட மாகாணத்தில் ஊர்காவற்றுறை வேலணைப் பிரிவுகளின் அங்குரார்ப்பண வைபவம் இன்று நடைபெறவுள்ளது. வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வி. யில்நடத்தப்படும் இவ் வைபவத்துக்கு வித்தியாலய அதிபர் மு. சிவராஜரத்தினம் தலைமை வகிப்பார்

இங்கு பிரதம விருந்தினராக டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பியும், சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் கிருஷ்ணராஜா, மாவட்ட வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறை, நா போஜன் (பிரதேச அத்தியட்சகர்) ஆகியோர்கலந்து கொள்வர்.

## மட்டுநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து இரண்டு குண்டுகள் பெருஞ்சத்தத்துடன் வெடித்ததைத் தொடர்ந்து மட்டுநகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

தீவிரவாதிகள் மேற்கொண்டதாகக்கூறப்படும் இக்குண்டு வீச்சுச் சம்பவத்தையடுத்துப் பொலிஸ் நிலையத்திலிருந்து அரைமணி நேரமாகத் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டபொழுதிலும் அக்கம்பக்கத்திலுள்ள கட்டடங்களுக்குஅற்பசொற்ப சேதங்கள் ஏற்பட்டதைத் தவிர குறிப்பிடக்கூடிய அனர்த்தங்கள் எதுவும் நிகழவில்லையெனத் தெரியவருகிறது. [ஷ]

## கோரிக்கை

(மாவிட்டபுரம்)

'வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ முன்பு 'பி' பத்திரம் பெற்று திருப்பி கையளித்தவர்கள் இன்று வருமானம் இழந்து அகதியாகியுள்ளனர். ஆகவே 'பி' பத்திரத்தை மீள கையளித்து வருமானக் கணிப்பு மேற்கொள்ளவேண்டும்''

இவ்வாறு அவசரகோரிக்கை ஒன்றை தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவரும், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவருமானதிரு சிவமகாராசா யாழ். அரசாங்க அதிபருக்கு விடுத்துள்ளார்.

முன்பு இவர்களால் நிரப்பி வழங்கப்பட்ட 'பி' படிவத்தை வைத்து முத்திரை வழங்கினல் இவர்கள் பாதிக்கப்படுவார் ஆகவே மீள அந்த படிவங்களை வழங்கி வருமானக் கணிப்பை மேற்கொண்டு அந்த அடிப்படையில் முத்திரை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.


## தேவை

நல்ல நிலையிலுள்ள 2 துவிச்சக்கர வண்டி தேவை. அரிவு ஆலையில் வேலை செய்வதற்கு கூலி ஆள் தேவை. கிராம சேவையாளர் நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில்வரவும்.

**சாயி மர அரிவு ஆலை,**
91, இராமநாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

(A538]

## உருக்கமான வேண்டுகோள்

சுங்க உதவி கலக்டராக கடமையாற்றும் கே. கே. சுப்பிரமணியம் கோவில் திருவிழா ஒன்றுக்காக வந்த பொழுது காரைநகரில் அவரது இல்லத்தில் வைத்து கடந்த 28ம் திகதியன்று இரவு இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

எவருக்கும் எதுவித தீங்கும்புரியாத இவரை தயை கூர்ந்து விடுவிக்க உதவுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

துயருறும் மனைவி,
பிள்ளைகள்,
உறவினர்கள்.

[C1564]

# COMPUTER PROGRAMMING
## in B. B. C. BASIC (Extended Basic)

எமது அடுத்த வார இறுதி வகுப்புகள் 6-4-86 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றன.

காலம்: 4 மாதம்
கட்டணம்: 1000 ரூபா
முகவரி: **J. SATHIADAS**
78, KANDY Rd.,
CHUNDIKULI.
(கச்சேரிக்கும் றெயில்வேக் கடவைக்கு மிடையில்)

[A 542]


## இரண்டாண்டு நினைவஞ்சலி



**கோபால் நித்தியானந்தசுந்தரம் (நித்தி)**

மலர்வு; 17-01-47
மறைவு: 25-03-84
திதி: 03-04-86

அன்புத் தெய்வமே அப்பா உங்கள் திருமுகம் எங்கு காணலாம். எத்தனை ஆண்டுகள் போனாலும்உங்களுடன் வாழ்ந்த வாழ்வை மறக்கமுடியவில்லையே. ஆண்டவனே எம் தெய்வத்தை பிரிந்து வாழ முடியாமல் இருக்கின்றதே. தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைவேண்டுகிறோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

C 1555

## 1ம் வருட நினைவஞ்சலி



**பாலர் குணசிங்கம்**

தோற்றம்: 14-11-1944
மறைவு: 30-03-1985

அன்புள்ள தெய்வமே உங்கள் நினைவில் வாழும் அன்பு மனைவியும் பிள்ளைகளும ஓரண்டுகாலமாக என் இதயத்தில் இருக்கும் என தெய்வமே உங்கள் மழலை மொழிகள் எங்களை வாட்டுகிறது. உங்கள் அன்பான சொல்லுகள் எங்கள் இதயத்தில் நின்று கதறுகிறது. ஆண்டவனுக்கேபொறுக்க முடியவில்லை.

உங்கள் துயரால் வாடும்
அன்புள்ள மனைவி கிளி
உங்களை நினைத்து
வாழும் பிள்ளைகள்
ரமேந்திரன்,
றங்கேந்திரன், றமா.
றமணி றமணன்.
அன்புத் தம்பியை
நினைத்து வாழும்
அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார்,
மச்சாள்மார், உற்றார்.
உறவினர்கள்,
நண்பர்கள்.

ராஜவீதி,
கல்வியங்காடு.

C 1559

# இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 21-[1986-4-3]
கிழமை- வியாழன்
திதி- நவமி பி பகல் வரை
நட்சத்திரம்- உத்தராடம் மு இ. வரை

மேடம்: எதிர்பாராத பிரயாணம் ஒன்று இன்று ஏற்படலாம் முன்னாள் ஆசிரியர் ஒருவரின் அறிமுகம் உங்களுக்கு வசதிகளைத் தேடித் தரும்.

இடபம்: இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் வரவுமுண்டு. பிள்ளைகளாலும் முன்னேற்றம் காணப்படும்

மிதுனம்: துன்பத்தின் ரேகை படரும் எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரே முடிவில் சையை விரிப்பர்

கடகம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கிடமுண்டு. பிரிந்தவர்கள் வாழ்வில் மீண்டும் இணைவர், வரவுக்குமிடமுண்டு

சிங்கம்; தொல்லைகள் தலைதூக்கும். தொழில்புரியுமிடத்தில் ஏமாற்றத்திற்குமிடமுண்டு. வழக்கு விவகாரங்களில் திருப்தி குறையும்

கன்னி; வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும். சுற்றவர்களின் வாழ்த்தும் சண்டிப்பாக உண்டு அறவழியிலும் நாட்டம் பிறக்கும்.

துலாம்: மகிழ்ச்சிகரமான தினம். தொழிலாலும் சிறப்புண்டு. மேலதிகாரிகளும் உதவிக்கு முன்வருவார்கள்.

விருச்சிகம்: தன்மான மிகுதிக்கும் தன வரவிற்குமிடமுண்டு. சிலருக்கு வாகன சுகமும் உண்டு.

தனுசு: நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படும். கடமையாற்றும் இடத்தில் அவதானம் நன்று. சிந்தித்துச் செயற்படவும்.

மகரம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள். சிறுவிடயத்திற்குக்கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள். வாத ரோகத்திற்குமிடமுண்டு.

கும்பம்: இல்லறத்தில் அமைதி நிலவும். பூமியால் இலாபமுமுண்டு. சமயோசிதமான நடவடிக்கையால் எதையும் சமாளித்துக்கொள்விர்கள்.

மீனம்: நினைத்தது நடக்காது. நிதியில் முடக்கமுண்டு. அதிக சிந்தனை சிறிய தலையிடியைக்கொடுக்கும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## கடத்தல்படகு பொருள்களுடன் பிடிபட்டது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து தலைமன்னார் பகுதிக்குப் பெருமளவு சாரங்கள் மற்றும் கடத்தல் பொருள்களுடன் வந்துகொண்டிருந்த படகு ஒன்றினைப் பாதுகாப்புப் படையினர் கடந்த ஞாயிறு இரவுதலைமன்னார் கடற்கரைக்கு அருகில் கைப்பற்றியுள்ளனர்.

படகில் வந்துகொண்டிருந்த 14 பேரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ச



## நினைவில் நிலைத்தவர்

1945 இலிருந்து இறக்கும் வரை சுமார் இருபத்தைந்தாண்டுகள் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானக் கல்வியூட்டிய அமரர் ஜே ஆர் தம்பிஐயா உண்மையிலேயே ஆசிரிய மணியாவார் உதவி ஆசிரியராகவும் உப அதிபராகவும் சிறிது காலம் அதிபராகவும் கடமையாற்றிய ஆசிரியப்பெருந்தகை ஒரு தலைசிறந்த ஒழுக்க சீலர். மாணவருக்கு மதத்தில் ஒழுக்கத்தை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்துமாயிருந்தவர். சிரேஷ்ட சராதரப்பத்திப்பரீட்சை ஆங்கில மொழியில் நடைபெற்ற அந்நாளில் விஞ்ஞான பாடங்கள் பௌதிகம இரசாயனம் என வேறு வேறாக கற்பிக்கப்பட்டன. அமரர் தம்பிஐயா அவர்கள் அவ்விரு பாடங்களை கற்பிக்கும் முறை அலாதியானது, கண்டிப்பானவர் என்ற பொது அபிப்பிராயம் நிலவிய போதும் உள்ளத்தில் மிக மென்மையானவர் மாணவர் தரமும் தாற்பரியமும் அறிந்து கற்பிக்கும் தனியான ஆற்றல் மிகுந்தவர் அவரிடம் கல்வி கற்று இன்று நல்ல நிலையில் இருக்கும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அவரை ஒருபோதும் மறவார். கனகரத்தினம் மத்திய மக வித்தியாலய விஞ்ஞான மன்றம் இன்று வெளியிடும் அறிவியல் கதிரை அன்னாருக்கு சமர்பித்து அஞ்சலி செலுத்துகிறது.

மு. இராமலிங்கம்
-அதிபர்-


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பிரயாண ஒழுங்கு

குவைத், டுபாய், சவுதி அரேபியா
செல்பவர்களுக்கு, பிரயாண ஒழுங்குகள் உடனடியாகச் செய்துகொடுக்கப்படும்.
கிளீனேஸ் (ஆண், பெண் இருபாலாரும்)
10- 4· 1986 க்கு முன்பாகத் தொடர்பு கொள்ளவும்.

**யூனிவேசல் ஏஜென்சி,**
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக
125 (455) ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(C 1530)

## LANKA CEMENT LIMITED
KANKESANTHURAI.

## ஏலவிற்பனை

1986-04 06 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணி முதல் 12-00 மணி வரை பாவிக்கப்பட்ட துண்டுக்கம்பிகள், முறுக்குக் கம்பிகள், "ஆங்கில் அயன்", எச் ஐ வடிவ உருக்குத் தீராந்திகள் என்பன லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏலவிற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986-04-05-ந் திகதி சனிக்கிழமை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையில் 3-ம் கூற்று முடிவடைந்தவுடன் முழுத்தொகையின் 1/3 பகுதிப் பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.

பொருட்கள் பகுதி பகுதியாக கொள்வனவு செய்வோர் கூறப்பட்ட திகதியான 6-ம் திகதி ஏப்ரல் 1986 இல்லிருந்து 2 நாட்களுக்குள்ளும் முழுக்கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்கூறப்பட்ட திகதியில் இருந்து 5 நாட்களுக்குள்ளும் தொழிற்சாலை வளவில் இருந்து விற்கப்பட்ட பொருட்களை அகற்றவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்.

**லங்கா சீமெந்து லிமிட்டெட்,**
காங்கேசன்துறை.

1986-03-29. (A 419)


# அமரர் க. முத்துவேற்பிள்ளை

அண்மையில் சிவபதமடைந்த இளைப்பாறிய அதிபர் முத்துவேற்பிள்ளை அவர்கள் யூனியன் கல்லூரியில் ஐந்துவருடங்கள் உதவஆசிரியராய் கடமையாற்றினர் சிறிய இருபாஷைப் பாடசாலையாய் இருந்த அக்கல்லூரி பின் உயர்தரம் அடைவதில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. பின் ஆசிரிய கல்லூரியில் பயிற்சி பெற்றார். இவர் றோயல் கல்லூரியில் படிக்கும்பொழுது கணித, விஞ்ஞான ஆசிரியராய் பெரும்புகழ பெற்ற பெரியார் சண்முகரத்தினம் அந்த ஆசிரியராய் இருந்தார். பின் அவர் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைச்கு அதிபராய் வந்தார். தன் பிரதம மாணக்கனாயிருந்த முத்துவேற்பிள்ளையைத் தனக்கு உதவ அங்கு பேராசிரியராக்கினர். அவருடைய கணிதம், விஞ்ஞானம் கற்பித்தல் திறன் ஆசிரிய மாணவருக்கு வரப்பிரசாதமாக இருந்தது. பின் இக்கலாசாலை பலாலிக்கு மாற்றப்பட்டபோது அதனை முன்னேற்ற அரும்பாடுபட்டார். ஆனால் இவருடைய பலவகைத் திறனையும் அறிந்த மானிப்பாய் வாசிகள் இவரை அங்கு அழைத்தனர். தன் ஊரில், தன் பழைய கல்லூரிக்குச் சேவை செய்யவேண்டுமென்ற பெரும் நோக்குடன், தன்னலம் கருதாது அவர்களுடைய அழைப்பையேற்று, 1952-இல் உப-அதிபராயும், 1956 - இல் அதிபராயும் அமர்ந்தார். இவ்வாறு இவருடைய தியாகவாழ்க்கை ஆரம்பித்தது.

அமரர் வீரசிங்கம் அவர்சள் அதிபராக இருந்தகாலம் இக்கல்லூரியின் பாற்காலம். பல துறைகளில் இக்கல்லூரி இலங்கையிலேயே புகழ்பெற்றிருந்தது. ஆனல் அந்த நிலையிலிருந்து தொடர்ந்து முன்னேறுவதற்கு முத்துவேற்பிள்ளையே மிகப்பொருத்தமானவரென்பதையும் தன் சேவையால் நிரூபித்தார். யாழ்ப்பாணத்திலேயே முதல் தரம் என்று கருதப்படும் பௌதீக, இராசாயன, உயிரியல் ஆய்வு கூடங்களை உருவாக்கினர். தகுதியான மாணவர்கள் மேல் படிப்புக்காக வேறு பாடசாலைகளுக்குப் போகும்காலம் மாறி, உயர் வகுப்புகளில் சேருவதற்குப் போட்டியிடும் காலம் விடிந்தது ஒருவருடத்தில் மூன்று அல்லது இரண்டு மாணவர்களையட்டும் சர்வகலாசாலைக்கு அனுப்பிய கல்லூரி, படிப்படியாக எண்ணிக்கை கூடி, இவர் இளைப்பாறமுன், 1971-இல் 25பிள்ளைகளை அநேகமாக பொறியியல், விஞ்ஞான



துறைகளுக்கு அனுப்பியது. இது ஒரு மகத்தான சாதனையன்றோ! ஒரு முதல்தரக் கல்லூரிக்கு வேண்டிய வசதிகளையும் உருவாக்கினர். மானிப்பாய் மகளிர் கல்லூரி இவருடைய கனவில் உதித்தது. அன்று பழைய மாணவர் சங்கச் செயலர் திரு. செல்வரத்தினம் போன்ற நண்பர்களுடைய உதவியுடன் 1963-இல் நனவாக்கினர். முகாமையாளர்கள் இவருக்கு முழு அதிகாரங்களையும் கொடுத்திருந்தும் அவற்றை மித்துருசத்துரு என்ற பேதமின்றி எவர்க்கும் ஒப்ப நடந்த பெருமகன். ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றுரும மதிப்புக்கலந்த தனியன்பு செலுத்தி ஒத்துழைப்பு வழங்கினர்.

வட இலங்கை ஆசிரியர் சங்கத்திலும், கல்லூரி அதிபர்கள் சங்கத்திலும், விளையாட்டுச் சங்கத்திலும் தலைவராய் இருந்து, பிரச்னைகள் எழும் போது தன் முதிர்ந்த அனுபவங்களைப் பயன்படுத்தி அவற்றைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார். இளைப்பாறியபின் சமயத்துக்கும், சமூகத்துக்கும் பயனுள்ளதாக வாழ்ந்தார். ஆழ்ந்த கடவுள் பக்தி உடையவர். சிவதொண்டன் நிலையத்திற்கு இவரும், இவரது பாரியாரும் ஒழுங்காகப் போவதுண்டு. அதனுல் அன்றோ இவர் எவ்வித மரணஅவஸ்தைகளும் இல்லாமல் அமைதியய் மறைந்தார், மிகச் சிலருக்கே இறைவன் இவ்வண்ணம் மறைய அனுக்கிரகித்திருக்கிறார். அவர் எனது மனதுக்கு இனிய நண்பர்; 1951-இல் நான் நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது பல உதவிகள் செய்தார் ஒரு நாள் யோகர்சுவாமிகளிடம் போனர் அவர் தானுகவே என் சுகம் விசாரித்து, "இருண்டால் விடியும் தானே என்று ஒறேற்றருக்குச் செல்லு" என்று பணித்தாரு ளும் அந்த அமுத வாக்குகளைக் கேட்டபின் எனது வியாதி படிப்படியாய் குணமாகி, இரண்டு கிழமைகளில் நான் எனது கடமைகளுக்குப் போனேன்.

இத்தகைய உத்தம புருஷனுடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சி. சுப்பிரமணியம்,
(இளைப்பாறிய அதிபர்)

## இசைக்கலைஞர் அமரர், அல்வின் தேவசகாயம்

நம்மிடையே வாழ்ந்து அண்மையில் இவ்வுலகை நீந்தவரான திரு. அல்வின் தேவசகாயம் 1945 - ம் ஆண்டளவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று நான்கு ஆண்டுகள் கர்நாடக இசைக் கலையைப்பயின்று சங்கீதப் பூஷணம் பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பியவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் டயின்ற காலத்தில் ஒரு சிறந்த மாணவனுகவும், பல்கலைக்கழக உதைபந்தாட்டக் குழுவில் காப்டனுவும் திகழ்ந்து பல போட்டிகளில் கலந்து பல்கலைக் கழகத்திற்கு வெற்றி வாகை சூடிக் கொடுத்தவர்.

யாழ்ப்பாணத்தின் மூத்த இசைக் கலைஞர்களுள் ஒருவரான இவர், இலங்கை வானொலியில் பல சிறப்புக் கச்சேரிகளைச் செய்து புகழ் பெற்றவர். இவருடைய சாரீரமும் சரீரமும் இறைவனுல் பிரத்தியேகமாகக் கொடுக்கப்பட்ட கொடை எனலாம் தான் வாழ்ந்த காலத்தில் ஒரு இசை ஆசிரியனுக மட்டக்களப்பிலும் வசாவிளான் மகா வித்தியாலயத்திலும் கடமை புரிந்துள்ளார். ஆசிரிய சேவையினின்றும் இளைப்பாறிய பின் சமூகத் தொண்டுகள் பல செய்து கிறிஸ்தவ மக்கள் மத்தியில் குறிப்பாகக் பாஷையூர், குருநகர் பகுதிகளில் பெரும் புகழ் ஈட்டியுள்ளார் பல மாணவர்களை உருவாக்கிய இவர், தனக்குப்பின் இசைத் துறைக்கென்று தன் மகளையும் உருவாக்கிய பின் இறையடி சேர்ந்துள்ளார் அன்னரின் மறைவு இசை உலகிற்குப் பெரும் இழப்பு அவர் விட்ட பணி தொடர நாமும் உழைப்போமாக.

எஸ். திலகநாயகம்போல்
[மாணவன்]

# மீன் பிடிக்கச் சென்ற நால்வரைக் காணவில்லை!

(பண்டத்தரிப்பு)

கடலில் மீன் பிடிக்க வள்ளமொன்றில் சென்ற மாதகலைச் சேர்ந்த நான்குபேர் கடலில் காணாமற் போய்விட்டதாக அஞ்சப்படுகின்றது.

சிலதினங்களுக்கு முன்பு மாதகல் கடற்றொழிலாளர் விரிவாக்க சேவைச் சங்கத்தின் செயலாளர் வி. அருந்தவமுட்பட நான்குபேர் இரவு வேளையில் கடலில் மீன்பிடிக்கச் சென்றதாகவும் இவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை மாதகல் கடற்பகுதியில் கடற்படையினர் பீரங்கி பூட்டிய ரோந்துப் படகு வள்ளமொன்றை சுட்டு நிர்மூலமாக்கி விட்டதாக பாதுகாப்பு அமைச்சு கடந்த வாரம் அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது

காணாமற் போனவர்களின் குடும்பத்தினரும் உறவினர்களும் இவர்கள் திரும்பி வராதது குறித்து பெரும் கவலையும் சோகமும் அடைந்துள்ளார்கள்.

## "ஆரம்ப சுகாதாரநிலையங்கள்

# சகல கிராமங்களிலும் அமைக்கப்படவேண்டும்"

[புலோலி]

'ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையங்கள்இன்றுகிராமிய மகளுக்கு பல்வேறு வகையான சேவைகளை வழங்கி வருகின்றன கிராமங்கள் தோறும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க வேண்டிய முக்கியத்துவம் இன்று ஏற்பட்டுள்ளது'

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலிதகுமார் நவிண்டில் நாவலர் மடத்தில் ஆரம்பசுகாதார நிலைய அலுவலகத்தைதிறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினார். நிலையத்தலைவரும் இளைப்பாறிய மேல் நீதிமன்றப் பதிவாளருமாகிய திரு. வீ. கே. விஸ்வலிங்கம் விழாவிற்குத் தலைமை தாங்கினார் தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் லலிதகுமார் மேலும்பேசுகையில் கிராமிய மக்கள் ஒன்றிணைந்து சகல கிராமங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டும். இப்பகுதியிலிருக்கும் ஆர்வமும் சேவை மனப்பான்மை உள்ள தொண்டர்களின் விடாமுயற்சியினாலேயே இங்கு இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டதுடன் தொண்டர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன என்றார்

முன்னாள் உடுப்பிட்டி எம். பி சட்டத்தரணி கே. ஜெயக்கொடி உரையாற்றுகையில் "வைத்திய வசதிகள் குறைந்த கிராமப்பகுதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் இவ் ஆரம்ப சுகாதார நிலைய செயற்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் இக்கிராம மக்கள் வேண்டிய ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்

யாழ். பல்கலைக்கழக விலங்கியற்துறை பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், அதிபர் திரு. கே. கணேசன் வங்கி உத்தியோகத்தர் திரு. இரத்தின. சிவபாதசுந்தரம் ஆசிரியர் திரு. எஸ் பகவத்சிங் சுகாதாரப்பரிசோதகர் . திரு எஸ். அரசரத்தினம். குடும்ப நல சேவையாளர். செல்வி. க. பேரின்பநாயகி. ஆகியோரும் உரையாற்றினார்கள்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை பொதுவைத்திய நிபுணர் டாக்டர் எஸ் ஆனந்தராஜன் தலைமையில் பல வைத்தியகலாநிதிகள் வைத்தியசேவைகளை வழங்கினர். திரு என் ஜெகதீஸ்வரன் நன்றி கூறினார்.

## கிறீன்லேட்ஸ் கழகம் வெற்றி

[யாழ்ப்பாணம்]

"ஈஸ்டர்" பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற மென் - பந்துக் கிரிக்கெட் போட்டியில், யாழ்ப்பாணம், கிறீன் லேட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் இரு பிரிவுகளும் வெற்றி பெற்றன.

கிறீன்லேட்ஸ் கழகத்தின் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும், பாரதி சழகத்துக்கு மிடையில் நடைபெற்ற போட்டியில், கிறீன்லேட்ஸ் கழகம் 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றது

கிறீன்லேட்ஸ் சழகம் முதல் இன்னிங்ஸில் 26 ஓட்டங்களையும், 2 - வது இன்னிங்ஸில் 33 ஓட்டங்களையும் பெற்றது

பாரதி கழகம் முதல் இன்னிங்ஸில் 27 ஓட்டங்களையும், 2 - வது இன்னிங்ஸில் 24 ஓட்டங்களையும் பெற்றது.

கிறீன்லேட்ஸ் [2] கழக 'பி' பிரிவுக்கும், கிறீன்பீல்ட் கழக 'பி' பிரிவுக்கு மிடையில் நடைபெற்ற போட்டியிலும் கிறீன்லேட்ஸ் சழகம் வெற்றி பெற்றது கிறீன்பீல்ட் கழகம் முதல் இன்னிங்ஸில் 40 ஓட்டங்களையும், 2 - வது இன்னிங்ஸில் 30 ஓட்டங்களையும் பெற்றது

கிறீன்லேட்ஸ் கழகம் முதல் இன்னிங்ஸில் 51 ஓட்டங்களையும், 2 - வது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 22 ஓட்டங்களையும் பெற்றது. இக் கழகத்தின் வீரர்களான, செபஸ்ரியன், ஜோன்ஸன், லெயிட் குளைன் ஆகியோரின் ஆட்டம் சிறப்பாக இருப்பது- [வி]

## ஜி.ஸி.ஈ. பரீட்சை முடிவு 10க்கு முன்

[யாழ்ப்பாணம்]

கடந்த டிசம்பர்மாதம் நடைபெற்ற ஜி சி ஈ (சாதாரண) பரீட்சை முடிவுகள் இம்மாதம் 10ம் திகதிக்கு முன் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பரீட்சை முடிவுகள் 10ம் திகதி வெளியானாலும், ரயில் போக்குவரத்துத்தடை காரணமாக முடிவுகள் வடபகுதிக்கு வந்துசேரத் தாமதமாகலாம் என்று கூறப்படுகிறது.

கடந்த மாதம் 22ம் திகதி இங்கு நடைபெற்ற சங்கீதம், நடன பாடச் செய்முறைப் பரீட்சை முடிவுகள் கொழும்புக்கு அனுப்பப் பட்டுவிட்டதாக சம்பந்தப் பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பரீட்சை முடிவுகள் வராதபோதும் பல கல்லூரிகளில் இப்பரீட்சைகளில் தோற்றிய மாணவர்களுக்கு ஜி சி ஈ. (உயர்தர) வகுப்பு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. [க]

## வன்முறையின்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய பயங்கரவாதப் புள்ளிகள் செயற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் இட்ட விதிகள் மேலும் விரிவாக்கப்பட்டு பயங்கரவாத அமைப்புக்களை மிகச் சச்சிதமாகச் சிக்க வைக்கும் வழிமுறைகள் அறிமுகப் படுத்தப்பட வேண்டும்' என்றும் அவ் வறிக்கை தெரிவித்துள்ளது. (கி)

### கச்சேரி — யாழ்ப்பாணம்

# அரச வைத்தியசாலைக் கட்டிடங்கள் அமைத்தல், திருத்த வேலை

1986-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் திகதி காலை 10-00 மணிவரை யாழ்.செயலக சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர் அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகள், ரூ 50 000/-க்குமேற் பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

இவ்வேலைகளைச் செய்ய விரும்புவோர் எவரும் அரச கரும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இவ்வேலைகளைச் செய்வதற்கு விரும்புவோர் 1986-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் கேள்விப பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 100/-, திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா 25/- ஒவ்வொரு வேலைக்கும் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை இலக்கம் | வேலைகள் விபரம் நிலையத்தின் பெயர் | வேலையின் விபரம் |
|---|---|---|
| 1. | மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு. | கூரை திருத்தவேலை, பூட்டு திருத்தவேலை, கதவுகள், யன்னல் திருத்தவேலை, வெள்ளையடித்தல் வேலை. |
| 2. | கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு. | நிலமட்டத்திலிருந்து 1 அடி உயரமுள்ள களஞ்சிய அறை பக்கச் சுவர், சீமெந்துப் பூச்சுவேலை. |
| 3. | மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை. | வைத்திய விடுதிக்கு அடுப்பு, புகைக் கூடு கட்டுதல். |
| 4. | மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை. | ஆண் - பெண் மனநோயாளர் பகுதி யன்னல்களுக்கு வலை அல்லது இரும்புக் கம்பி பூட்டுதல். |
| 5. | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. | முழுக் கட்டிடத்தில் பழுதுதிருத்த வேலை. |
| 6. | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. | 2ம் வாட்டுக்கு 2''x2'' வலை ½ பங்கு சுவருக்குப் பூட்டுதல். |
| 7. | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. | 6.7,8,9ம் இலக்க வாட்டு விறாந்தையில் 4'' சுவர், 4 அடி உயரத்திற்கு 1'x10''விக்கட் படலையுடன் அமைத்தல். |
| 8. | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. | வைத்திய விடுதி திருத்தம். |
| 9. | சுற்றயல் பிரிவு - அச்சுவேலி | பெண்கள் வாட்டுக்கும் பிரசவவாட்டுக்கும் இடையில் பாதை அமைத்தல் |
| 10. | சுற்றயல் பிரிவு - அனலைதீவு | மருத்துவரின் (D M.O's) விடுதிக்கும் வைத்தியசாலைக்கும் திருத்தவேலை. |
| 11. | மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி. | கூரை ஒழுக்கு திருத்தவேலை, பழுதான ஓடுகளை அகற்றிப் புதியது போடுதல். |
| 12. | மத்திய மருந்தகம், பிரசவ விடுதி, வேரவில். | மருந்தகம் கட்டிடம் திருத்தவேலை. |

### விசேஷ திருத்த வேலை

| | | |
|---|---|---|
| 13. | மத்திய மருந்தகம், பிரசவ விடுதி, அம்பன். | உட்கூரை மரம் மாற்றல். |
| 14. | மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி | வைத்தியசாலை வளவின் மேற்கு, வடக்குப் பக்க வேலி திருத்தவேலை. |
| 15. | மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி. | யன்னல்களுக்கு வலையடித்தல். |
| 16. | சுற்றயல்பிரிவு - பூநகரி. | முன்புறம் இரும்புப் படலை அமைத்தல். |

### வாளி மலகூடத்தை நீரடைப்பு மலகூடமாக மாற்றுதல்

| | | |
|---|---|---|
| 17. | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை. | மருத்துவரின் விடுதிக்கு நீரடைப்பு மலகூடமாக அமைத்தல். |

### விஸ்தரிப்பு திருத்தம், நீர்கொடுத்தல் கழிவு நீர்கால் அமைப்பு

| | | |
|---|---|---|
| 18. | சுற்றயல் - அனலைதீவு | மின்சார இறைப்பு இயந்திரம் பூட்டுதல், நீர்க் குழாய்கள் திருத்த வேலை, தண்ணீர்த் தொட்டி புதுப்பித்தல். |
| 19. | சுற்றயல், அக்கராயன்குளம் | நீர்க் குழாய்கள் திருத்தவேலை. |
| 20. | கிராமிய வைத்தியசாலை, பருதங்கேணி. | தண்ணீர்த் தொட்டி நீர் இறைக்கும் இயந்திர அறை நீர் இறைக்கும் இயந்திரம். நீர்க் குழாய் அமைத்தல். |
| 21. | மத்திய வைத்தியசாலை, பிரசவவிடுதி-வேராவில் | நீர்க் குழாய் மாறறி (S-Lon) குழாய் அமைப்பது. |
| 22. | மத்திய வைத்தியசாலை, பிரசவ விடுதி-தர்மபுரம் | நீர்ச் குழாய் மாற்றி (S-Lon) குழாய் அமைப்பது |
| 23. | கிராம வைத்தியசாலை, பண்டத்தரிப்பு | கழிவுத் தொட்டி 3 அமைத்து நிலத்துக்கு மேல் 2 அடி உயர்த்துதல். |

### புதுக் கட்டிடம் அமைத்தல்

| | | |
|---|---|---|
| 24. | ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை | கலந்துரையாடுதல் மண்டபம் அமைத்தல். |
| 25 | மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி. | 1ம்,2ம் வாட்டுக்கு மலசலகூடம் அமைத்தல். |

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல வைப்பதுடன் சடித உறை இடதுபக்க மூலையில், 'சுகாதாரப் பகுதியின் கட்டிட அமைத்தல்/திருத்த வேலைக்கான கேள்வி' பத்திரம், வேலை இலக்கம் .... .................. வேலை இலக்கத்தைக் குறிப்பிடுக)" என்று குறிக்கப்பட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இவ்வலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பவேண்டும் அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவருடைய கேள்வி ஏற்கப்பட்டதென அறிவித்தல் கிடைத்த 1 வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தைச் செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படுதல்வேண்டும் அவ்வாறு செய்யத் தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம். தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5 வீதத்தை ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிக்கப் பிணைப் பணமாக அரசாங்க அதிபர் நியமிக்கும் வங்கியில் கட்டவேண்டும்.

வேலை திருப்திகரமாக முடிந்தபின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும், அனைத்துத் தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச் சபைத் தலைவரைச் சார்ந்ததாகும்.

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும்.
யாழ்ப்பாணம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
31-3-1986.

(A 530)

# கொழும்புத்துறையில் ஆயுத இளைஞர்கோஷ்டி கைவரிசை!

(யாழ்ப்பாணம்)

ஆயுதங்களுடன் வான் ஒன்றில் வந்த பதினைந்து இளைஞர்களில் சிலர் வீட்டைச் சுற்றி நிற்க வேறு சிலர் வீட்டுக்குள் புகுந்து வீட்டுக்காரரை அறையுள் பூட்டி வைத்து விட்டுப் பணம், நகைகள், மோட்டார் சைக்கிள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் யாழ். கொழும்புத்துறை வீதியில் உள்ள கணக்கர் சந்திக்கருகாமையில் வசிக்கும் ஆறுமுகம் சுந்தரலிங்கம் என்பவரது வீட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளது. இரவு 11-15 மணியளவில் வீட்டு மதில் சுவரால் ஏறி வளவினுள் குதித்த ஆயுத தாங்கிய இளைஞர்களைக் கண்டதும் வீட்டுக்காரர் கள்ளர் கள்ளர் எனக் கூக்குரலிட்ட போதிலும் அயலில் உள்ள எவரும்வந்து சேரவில்லையாம்.

வீட்டுக்குள் நுழைந்த ஆயுதம் தரித்த இளைஞர்கள் ''நடப்பது தெரியும் தானே? கொலை செய்துவிடுவோம் எனப்பயமுறுத்தி வீட்டிலிருந்த பெண்களையும் முதியவரையும், சிறுவனையும் அறை ஒன்றினுள் படுக்க வைத்து வீட்டுச் சொந்தக்காரரான சுந்தரலிங்கத்தைப் பணம் நகைகள் இருக்குமிடங்களைக் காட்டும்படி கேட்டனராம். பணம், நகை யாவற்றையும் கொள்ளையடித்த நபர்கள் அங்கு நின்ற மோட்டார் சைக்கிளையும் பெண்கள் அணிந்திருந்த தோடு, காப்பு, மோதிரம் என்பனவற்றையும் கொள்ளை அடித்துச்சென்றனராம்.

யாழ். தபாலகத்தில் கடமை புரியும் சுந்தரங்கத்திடம் உறவினர்கள் நண்பர்கள் மணியோடர் போன்றவற்றை மாற்றித் தரும்படி கொடுப்பது வழக்கமென்றும் அப்படியாகச் சிலரின் மணியோடர் மாற்றிய பணமும் இக்கொள்ளையின் போது எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# இலங்கை ராணுவ முஸ்தீபுகளில் பாக். பங்கு அதிகரிக்கிறது

## -'இந்தியா ருடே'

[புதுடில்லி]

''இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வுகாண இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சிகளில் பாகிஸ்தானின் பங்கு அதிகரித்து வருவதே இலங்கைப் பிரச்னையைப் பொறுத்து இந்தியா தனது நிலையைக்கடுமையாக்கிக் கொண்டதற்கான காரணமாகும்'',

'இந்தியா ருடே' சஞ்சிகையில் திலீப்பொப் எழுதியுள்ள செய்தி விமர்சனத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

திலீப்பொப் தமது 'இந்தியா ருடே' விமர்சனத்தில் மேலும் எழுதியுள்ளதாவது;

''தென்னாபிரிக்கா, இஸ்ரேல், பிரிட்டன், சீனா, சிங்கப்பூர் ஆகியவற்றையடுத்து பாகிஸ்தானிலிருந்தே அதிக அளவிலான ஆயுதங்களை சமீப காலமாக இலங்கை கொள்வனவு செய்யத்தொடங்கியுள்ளது.

''25, 'பவுண்டபீள்ஸ்' துப்பாக்கிகள் 130 மீடியம் துப்பாக்கிகள், ராக்கட் மூலம் வீசப்படும் எறிகுண்டுகள் போன்ற கனரக; மத்தியரக ஆயுதங்களை இலங்கை பாகிஸ்தானிடமிருந்து பெற்றுள்ளது. மற்றும் பத்தாயிரம் சிறுரக ஆயுதங்கள், ரைபிள்கள், இயந்திரத் துப்பாக்கிகள் மோட்டார்கள் போன்றவையும் கொள்வனவகியுள்ளன.

''பாகிஸ்தான் அரசு மேற்கொண்டும் ஆறு பீரங்கி பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்களையும் கொடுத்துதவ முன்வந்துள்ளது. பாகிஸ்தானின் தலையீடு ஆயுத கொடுப்பனவோடு நின்றுவிடவில்லை. கடந்த ஒரு வருடத்தில் எண்ணாயிரம் ராணுவ அதிகாரிகள் கிளர்ச்சி எதிர்ப்பு மற்றும் ஆயுத பிரயோகப் பயிற்சி போன்றவற்றை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பியுள்ளனர். (பி)

# கொட்டடியில் ஷெல்தாக்கி சிகிச்சைபெற்ற பெண்ணும் மரணம்

[யாழ்ப்பாணம்]

கொட்டடியில் கடந்த மாதம் 1ம் தேதி நடந்த 'ஷெல்' தாக்குதலில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தகொட்டடியைச் சேர்ந்த மா. பரமேஸ்வரி [35 வயது] நேற்றுக் காலை மரணமானார். இவர் 6 பிள்ளைகளின் தாய் ஆவார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர்.

# ஆசியப்போட்டியில் இலங்கை வெற்றி!

[கண்டி]

இலங்கை-பங்களாதேஷ் கோஷ்டிகளிடையே கண்டி 'அஸ்கிரிய' மைதானத்தில் நடைபெற்ற ஒரு நாள் ஆசிய வெற்றிக்கிண்ணத்துக்கான போட்டியில் இலங்கை 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் கோஷ்டி 45 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 131 ஓட்டங்களைப் பெற்றது. அலாம், அபடீன் ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்கள். ரவி ரட்ணாயக்கா, அமலீன் ஆகியோர் சிறப்பாகப் பந்துவீசினார்கள்

இலங்கைக் கோஷ்டி 31 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 132 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டியில் சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவுசெய்யப்பட்ட வீரர் அசங்கா குருசிங்காவும், அருச்சுன ரணதுங்கவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்கள்.

## இறுதி ஆட்டம்

மேற்படி சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் நடைபெறும். இறுதிப்போட்டியில் பாகிஸ்தான்-இலங்கைக் கோஷ்டிகள் மோதிக்கொள்ளும்.

[வி]

# வல்வையில் பீரங்கி ஷெல் தாக்குதல்கள்!

## பலர் காயம்! வீடுகள் சேதம்!

[வல்வெட்டித்துறை]

நேற்றுமுன்தினம் வல்வை இராணுவ முகாமிலிருந்து கடற்கரையோரப் பாதையால் வெளியேவர முயன்ற கறுப்புச் சட்டைக்காரரையும் இராணுவத்தினரையும் நோக்கிப் போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் கைக்குண்டுகளையும் வீசினர். இராணுவத்தினரும் எதிர்த்தாக்குதல்நடத்தினர் பின்னர் படையினர் முகாமுக்குத் திரும்பினர்

இதனையடுத்து இரவு சுமார் 1-30 மணியளவில் திடீரெனப் பயங்கரச் சத்தங்களுடன் வல்வை இராணுவ முகாமிலிருந்தும், கடலிலிருந்தும், 'ஷெல்' தாக்குதல்களும் பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. பீதியடைந்த மக்கள் வல்வை முத்துமாரியம்மன் ஆலயத்திலும், சிவன் கோவிலிலும் தஞ்சமடைந்தனர். கடற்படையினரால் நடாத்தப்பட்ட 'ஷெல்' தாக்குதலினால் நல்லதம்பி மணி [32], சிவகுரு ரெத்தினம் [42] பரமசிவம் [35], மணியம் [40] ஆகியோர் பலத்த காயத்துக்குள்ளாயினர். இன்னும் சிலர் சிறு சிறு காயங்களுக்குள்ளாயினர்

கரையோர வீடுகள் சிலவும் உள்ளூர்ப்பகுதியிலுள்ள சில வீடுகளும் கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலால் சேதமடைந்தன.

கோயில்களில்தஞ்சமடைந்த மக்களில் சிலர் காலையில் தத்தம் வீடுகளுக்குச் சென்று அங்கிருந்து பாதுகாப்பான இடம்தேடிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

# நேற்றும் தாக்குதல்:

## பலர் காயம்!

[யாழ்ப்பாணம்]

பலாலி ஆயுதப்படையினரின் முகாம்களுக்கு அண்மையிலுள்ள கிராமங்களான கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான் பகுதிகள் மீது நேற்றுக்காலை ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்செய்யப்பட்டது

இத்தாக்குதலில் பலர் காயமடைந்தனர். [மா]

# வித்தியாலய நூலகம்

சர்வதேச இளைஞர் ஆண்டினையொட்டி யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய மாணவர்களாலும் பழைய மாணவர்களாலும் புனரமைப்புச் செய்யப்பட்ட பாடசாலை நூலகத்தின் சம்பிரதாயபூர்வமான திறப்புவிழா நாளை 4ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு அதிபர் திரு சி சிவசரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நூலகத்தைத் திறந்துவைப்பார். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குரிய நிதியும் அவ்வமயம் வழங்கப்படும் யாழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# டெஸ்ட்டியூப் துணைகொண்டு ஒரே சூலில் 5 குழந்தைகள்!

(லண்டன்)

பின்னர் தன் பெயரைச் சொல்லப் பிள்ளையொன்று இல்லையே என அங்கலாய்த்த ஒரு பெண் 'டெஸ்ட்டியூப்' கருத்தரிப்புச் சிகிச்சையைப் பெற்று ஒரே சூலில் ஐந்து ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

முப்பத்தி மூன்று வயதான ஆசிரியை திருமதி லிண்டா ஜக்கோப்பனுக்கே லண்டன் பல்கலைக்கழக மருத்துவமனையில் இந்த அதிர்ஷ்டம் அடித்துள்ளது

தாயும் சேய்களும் நலமாக இருக்கிறார்கள் என அறிவிக்கப்படுகின்றது.

இது மருத்துவத் துறையில் ஒரு மகத்தான சாதனையென மருத்துவத்துறை வட்டாரங்கள் கூறுகின்றன. (கெ)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் பாலகிருஷ்ணன் (ஆசிரியர்)

பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆறுமுகம் பாலகிருஷ்ணன் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியை 3-4-86 வியாழக்கிழமை (இன்று) நண்பகல் 1 மணியளவில் சம்புல்துறை மயானத்தில் நடைபெறும். தகவல்:

[C 1569] பா. முருகவேள் (மகன்)

## திரு. செ. இராஜசிங்கம்

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மலேசியா வாசியும் காலஞ்சென்றவருமாகிய டாக்டர் செல்லையாவின் மகன் இராஜசிங்கம் (Town Planning Officer) 31-3 86ல் காலமானார். இவர் சிவசோதியின் அன்புக்கணவரும், ரமேஷ், சுரேஷ், டினேஷ் ஆகியோரின் அன்புத்தகப்பனும். குலசிங்கம், சரஸ்வதிதேவி, பரம்சோதி, மகேஸ்வரிதேவி, சிவகாமசௌந்தரி. குமாரசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் மலேசியாவில் நடைபெற்றது. தகவல்: ஸ்கந்தராசா,

கனகரத்தினம் வீதி வட்டுக்கோட்டை.

(C 1554)

## திரு. ஜி. வைத்திலிங்கம்

கோப்பாய் ஜி வைத்திலிங்கம் காலமானார் இவர் நவமணியின் அன்புக் கணவரும், மகிழ்ராசன் (பிரான்ஸ்), பாலராஜ் (சவுதிஅரேபியா). சற்குணம் (மேற்கு ஜேர்மனி), கலாவதி, சந்திரவதி ஆகியோரின் அன்புத்தகப்பனும். நேசமலர், ஜஸ்மின், வரதகுமாரி, பிரான்சிஸ் சேவியரின் மாமனும் மனோராஜ் ரட்ணராசா, ஜெவ்றி, ஜெறல்ட் ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை 3-4-86 (இன்று)வியாழக்கிழமை மாலை 2மணிக்கு நடைபெற்று கோப்பாய் பரிசுணி மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றாரும், உறவினரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C 1565) தகவல்: திருமதி வைத்திலிங்கம்

## திரு. சண்முகம் முத்துக்குமாரு

(அனலைதீவு 1-ம் வட்டாரம்)

[முன்னாள் உத்தியோகத்தர், டெபாங் எஸ்டேட், மலேசியா, பொதுமுகாமையாளர்:- அனலைதீவு சதசிவ ஆங்கில பாடசாலை ஐயனார் கோவில்; புளியந்தீவு நாகேஸ்வரன் கோவில்.]

இவர் அமரர் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், லோகமான்யதிலகன் [தொழில்நுட்ப உத்தியோகத்தர்], தில்லைநாதன், பரந்தாமன் [கனடா] சரோஜினி, திலகம், தனலஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும், சாம்பசிவம் [Rtd Staff Asst, A.G A. Office, Jaffna], கணேசன் [Registrar, மாவட்ட நீதிமன்றம், ஊர்காவற்றுறை] கண்ணமூர்த்தி [ஆசிரியர், கிளிநொச்சி மகாவித்தியாலயம்], சரோஜினிதேவி, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புமாமனும், அமரர்கள் பொன்னம்பலம். இராமலிங்கம் [சிங்கப்பூர்], நாகமுத்து. அனலைதீவு சேதுப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் அனலைதீவில் இன்று [3- 4- 86] நடைபெறும். தகவல்: க. சாம்பசிவம்.

[C 1567]

## முத்துக்குமாரசாமி பாலேந்திரன்

[உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்]

முத்துக்குமாரசாமி பாலேந்திரன் காலமாகிவிட்டார். இவர் முத்துக்குமாரசாமி [Retd Surveyor] தங்கரத்தினம் தம்பதிகளின் அன்புமகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக்கணவரும், சங்கரி சிவசுரி [உடுவில மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், Dr சீதா மகாதேவா [U K] மகேந்திரன் [Engineer, U K] தெய்வேந்திரன் [Surveyor], ராஜேந்திரன் [Ceynor] ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr மகாதேவா (U.K ), நடராசா, அம்பாள் (U K ), Faith, சரோஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று 03- 04- 86 பி. ப. 3மணிக்கு மேதர்ஸ் லேன், மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C1566) தகவல்! எஸ். முத்துக்குமாரசாமி.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389.
84126